2003 ஜனவரி 31]

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நகர வங்கி தொடங்கப்பட வேண்டுமேயானால், 10 இலட்சத்திற்கும் அதிகமாக மக்கள் உள்ள பகுதிகளில், 3,000 உறுப்பினர்களைச் சேர்த்து, அதன் மூலமாக 400 இலட்சம் ரூபாயைப் பங்குத் தொகையாகச் செலுத்திடுதல் வேண்டும். 5 இலட்சத்திற்கும் அதற்கு மேல் 10 இலட்சத்திற்குள்ளும் உள்ள பகுதிகளில் 200 இலட்சம் ரூபாயைப் பங்கு முதலீடாக வைப்பதுடன், 2,000 உறுப்பினர்களையும் சேர்த்திடுதல் வேண்டும். அதுமட்டுமல்லாது, 1 இலட்சத்திற்கு அதிகமாக உள்ள பகுதிகளில் 100 இலட்சம் ரூபாயையும், 1,500 உறுப்பினர்களையும் சேர்க்கின்ற வகையில் இந்த வங்கிகளுடைய பணிகளெல்லாம் இருக்கின்றன. அதற்கு மேலாக, இந்தப் பகுதியிலே பல்வேறு கூட்டுறவு வங்கிகள் மாத்திரமல்லாது, வர்த்தக வங்கிகளான ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, கத்தோலிக்கன் சிரியன் வங்கி, கனரா வங்கி போன்ற வங்கிகளெல்லாம் இந்தப் பகுதியிலே செயல்பட்டு வருகின்றன. எனவே, அப்படிப்பட்ட ஒரு நிலைப்பாடு இருக்கிறபோது, அந்த இடங்களிலே இலாபகரமாக இந்தக் கூட்டுறவுச் சங்கத்தை நடத்த இயலாமை இருக்கின்றது. உறுப்பினர் அவர்களுடைய நல் வேண்டுகோளுக்கிணங்க ரிசர்வ் வங்கியினுடைய அனுமதியைப் பெறுகின்ற வகையில், இத்தகைய நடைமுறைகளின்படி அமைக்கப்படுமேயானால், அந்த வங்கிகளை அமைப்பதற்கு அரசு சிந்திக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிவிப்புகள்

(அ) எடுத்துக்கொள்ளப்பட்டவை நீங்கலாக எஞ்சிய கவன ஈர்ப்பு முன்னறிவிப்புகளுக்கான பதில்கள் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படுதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, எஞ்சிய கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கான பதில்கள் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. சி. சிவசாமி.

[2003 ஜனவரி 31

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2001—2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் பத்தாவது, பதினொன்றாவது மற்றும் பன்னிரண்டாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் சார்பாக திரு. ப. இராஜரெத்தினம்.

திரு. ப. இராஜரெத்தினம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்து, 2002—2003 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 131 முதல் 133 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் தலைவர் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2002—2003 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்து மூன்றாவது முதல் எண்பத்து எட்டாவது வரையிலான 16 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஈ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. ஞானசேகரனுக்குப் பதிலாக திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள் அளிப்பார்கள்.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா